சபரகமுவ மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆலோசகர் (இலகுப் பொறியியல்) III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2020

திறந்த போட்டிப் பரீட்சை

தகைமைகள்

(அ) இப் பதவிக்காக பின்வரும் கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

i. சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்கள் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு (01) பாடமாவது (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) தொழிற் தகைமைகள்

தொழிலுக்கு ஏற்புடையதாக (இலகுப் பொறியியல்) NVQ – 4 இல் நிபுணத்துவம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் இரு வருட இலகு பொறியியற் பயிற்சிப் பாடநெறியைப் பின்பற்றி இறுதிச் சான்றிதற் பத்திரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (முதலாவது வினைதிறமை காண் தடைப் பரீட்சைக்கு முன் NVQ – 4 இல் நிபுணத்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.)

(இ) விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியில் விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தொடர்புடைய அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியில் அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.

(ஈ) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியில் சபரகமுவ மாகாணத்திற்குள் 03 வருட காலம் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி மாகாணத்திற்குள் 03 வருட காலம் வதிவுடையவராக இல்லாதிருப்பின் வாழ்க்கைத் துணை (கணவன் அல்லது மனைவி) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதிக்கு முன் அண்மித்த 03 வருட கால எல்லை சபரகமுவ மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரி நற்குணமுடையவராகவும் உடல் நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்காக சபரகமுவ மாகாண சபையின் www.sg.gov.lk என்ற இணையதளத்துடன் தொடர்பு கொள்ளவும்

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 2020.03.31 ஆகும்.

செயலாளர்,
சபரகமுவ மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தைகள் மற்றும்
சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு.
தொலைபேசி இலக்கங்கள் :- 0452222145. 0452230184